உ

நின்றைக்காளத்தி வள்ளல் சரித்திரம்.

இஃது

அம்பாசமுத்திரம் தீர்த்தபதி ஹைஸ்கூல்
தமிழ்ப்பண்டிதர்
மகா-ா-ா-ஸ்ரீ

ஆர். அரிகரமையர் அவர்களால்

இயற்றப்பட்டது.

காருண்ய கவர்ண்மேண்டாரவர்களால்
நிகழும் 1919-1920-ம் வருஷங்களுக்கு
ஹையர் எலிமேன்டரி கிரேட் ட்ரெய்யினிங் ஸ்கூல்
பரீக்ஷைக்கு உப்பாடமாக வைக்கப்பட்டிருக்கின்றது.

இரண்டாம்பதிப்பு
காப்பி 500.

...ஜம் பிரஸில் அச்சிடப்பட்டது.

...919.

...ved] [Price Rs. 4

உ

நின்றைக்காளத்தி வள்ளல் சரித்திரம்.

இஃது

அம்பாசமுத்திரம் தீர்த்தபதி ஹைஸ்கூல்
தமிழ்ப்பண்டிதர்
மகா-ா-ா-ஸ்ரீ
ஆர். அரிகரமையர் அவர்களால்
இயற்றப்பட்டது.

காருண்ய கவர்ண்மேண்டாரவர்களால்
நிகழும் 1919-1920-ம் வருஷங்களுக்கு
ஹையர் எலிமேன்டரி கிரேட் ட்ரேய்யினிங் ஸ்கூல்
பரீக்ஷைக்கு உபபாடமாக வைக்கப்பட்டிருக்கின்றது.

இரண்டாம்பதிப்பு
காப்பி 500.

தென்காசி, ஸ்ரீராமாநுஜம் பிரஸில் அச்சிடப்பட்டது

1919.

All Rights Reserved] [Price As. 4

முன்னுரை

பல நூற்றாண்டுகளின் முன், அருள், ஞானம், வள்ளன்மை, ஆஸ்திகபுத்தி, கல்வி, கேள்வி, கற்றோர்மாட்டன்புடைமை, தமிழபிமானம், முதலிய நற்குணங்கட்கெல்லாம் இருப்பிடமாய் விளங்கிய நின்றைக்காளத்திவள்ளலின் சரித்திரத்தை உள்ளபடி விரித்தெழுதப் போதிய கருவிகள் தற்காலங்கிடைப்பது அருமையாயிருக்கின்றதென்பது ஒரு தலையேயாம். என்றாலும், என் போன்ற சில நட்பினர்களின் வேண்டுகோளுக்கிசைந்து, அம்பாசமுத்திரம் தீர்த்தபதி ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர், மக-ா-ா-ஸ்ரீ R. அரிகரமையரவர்கள், சில தனிப்பாடல்களையும், கர்ணபரம்பரையையுமே ஆதாரமாகக்கொண்டு மேற்படி பிரபுவின் சரித்திரத்தை, அதிருசிகரமான தமிழ்நடையில் சிலகிளைக்கதைகளுடன் எழுதிப்பூர்ணம் செய்தனர்.

இந்நூல் வடிவிற்சிறியதாயினும், பற்பலவிதமான நீதிநெறிகளை விளக்குதலில் மிகவும் பெரியதாயிருக்கின்றபடியால் மாணவரோடு ஏனையவர்க்கும் படிக்கப்படிக்கப் பலவிதத்திலும் நன்மை பயக்குமென்பது எனது துணிபு.

Ambasamudram.
Date: 28—1—19

S. Namby
Theerthapathi High School

நின்றைக்காளத்தி வள்ளல் சரித்திரம்.

—[❋]—

கல்வி கேள்விகளிற் சிறந்தவர்க்கும், ஈகைத்தன்மையுள்ள செல்வவான்களுக்கும், இருப்பிடமான திருநின்றவூரிலே, காளத்தி என்ற ஓர் பிரபு இருந்தார். அவர் பூர்வ புண்ணியவசத்தினுல் சர்வசம்பத்தும் நிறைந்துள்ள மேலான குடும்பத்தில் ஜனித்தவராதலால், அதற்கியைய, அன்பு, அருள், ஈவு, இரக்கம், பெருந்தன்மை, கல்வி, கேள்வி, நற்குண நற்செய்கை முதலானவைகளெல்லாம், அவர்க்குப் பிறவிக் குணமாகவேயிருந்தன. அவர் சிறு வயதிலேயே நமது அருமையான செந்தமிழ்ப் பாஷையை, வெகு ஆவலுடன் கற்கத் தொடங்கினுர். "விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்றபடி வயது பதினறு நிரம்புகையில், கல்வி கேள்விகளில் மிகவுந்தேர்ந்தவரானுர். பஞ்சகாவியங்களிலும், பாரதொல்காப்பிய முதலான இலக்கணங்களிலும், நீதி நூல்களிலும், பெரும்பாகமும் அவர்க்கு மனப்பாடம். அவைகளுக்குரிய பெரியோர் உரைகளும், முகஸ்தந்தான். கற்றதின் பயனுய அடக்கம், வணக்க முதலான ஒழுக்கங்களும், ஈசுவர பக்தியும் அவரிடத்திற் பூர்ணம் பெற்றிருந்தன.

அவர் நாள்தோறும் தம்மிடத்தில் வரும் தமிழ்ப்புலவர்களை முகமலர்ந்த களிப்புடன் எதிர் சென்றழைத்து வந்து, இனிய வசனங்களைக் கூறி, அளவளாவி விருந்தளித்து, அவர் சொல்லுங்கவிதைகளை ஆவலுடன் செவியாரக் கவிந்து கேட்டு, மனதார நிரப்பிக்கொண்டு, அவைகளிலுள்ள ரஸங்களையெல்

லாம் எண்ணி எண்ணிக் களிப்பென்னுங் கடலில் மூழ்குவார். அப்பால்அவர் அந்தவித்வான்களை உள்ளபடி சிலாகித்துத் தகுதியான படி பரிசில்களுங்கொடுத்து, அனுப்புவார். விடைபெற்றுச் செல்லும் புலவருக்குப் பின் சில தூரம் நடந்துகொடுப்பார். அவர் கடும்பசிக்கு உணவு கொள்ளத் தாமதித்தாலும் கவிவாணர் வந்து கூறும் பாடல்களைக் கேட்பதிற் சிறிதும் தாமதிப்பதில்லை. அவர் சில வேளை சாப்பாட்டையும் மறப்பார். ஆனால், புலவர்கள் கூறும் வாய்ப்பாட்டை மறவார். மேலும் அவர், நாவுக்கு இனிமை நல்ல தமிழ்ப்பழக்கமெனவும். காதுக்கினிமை கனிவான செந்தமிழ்ப் பாடல்களைக் கேட்டல் எனவும், மனத்துக்கினிமை செய்யுள்களி லுள்ள பொருள்களை ஆழ்ந்தாய்ந்து அறிந்து ஆனந்தித்தலே எனவும், தமிழுக்கும் தமிழறிந்த வித்வான்களுக்கும் உபயோகப் படுத்தலே செல்வமுடைமைக்குரிய பிரயோசனம் எனவும், இம் மைக்குப்புகழும் புண்ணியமும், மறுமைக்கு மோக்ஷமும், அடைந்துகொள்ள விரும்புவார்க்கு இதுபோலுங் குறுக்கு நெறிவே றெதுவும் இல்லைஎனவும், துணிந்து அம்முறை பிசகாமல் நடந்தும் வந்தார்.

இவர் இப்படி இருபத்திரண்டாவது வள்ளலாக விளங்கி வருதலை, பல திசைகளிலுமுள்ள பாவாணர்கள் கேள்விப்பட்டு, வந்து நாடோறும் அந்தக் காளத்தி வள்ளலைக் கவிமாலைகளால் அலங்கரிக்க, அவரும் அவர்களைக் கனகமாலிகைகளால் அலங் கரிப்பதுமல்லாமல், பொன்னும், மணியும், அள்ளி அள்ளிக் கொடுத்துக்கொண்டும் வந்தார். அக்காலத்தில் அக்காளத்திப் பிரபுவைப் பாடிப் பரிசு பெறுத வித்வான்கள் ஒருவருமே இாரென்று சொல்லலாம். அவரிடத்திற் பெருகிக்கிடந்த ஸம்பத்து, ஊருணி தண்ணீரால் நிறைந்திருத்தலைப்போலவும் ஊருக்குப் பொதுவான மாமரம் பழங்களால் நிரம்பியிருத்தலைப்

போலவும், கவிவாணர்களுக்கிருந்தது. தமிழறிந்தமேதாவிகளின் சங்கத்தையல்லாமல் வேறொருகூட்டத்தையும் அவர் அறிவதில்லை. சண்டை சமாதான முதலிய சகல விஷயங்களையும் அவர் தக்க தமிழாளிகளிடத்திலே செய்து கொள்ளும் ஒரும் பாக்கியத்தைப் பெறுவாராயினர்.

அக்காலத்தில் அந்நாட்டுக்கொரு அரசனிருந்தான், அவன் மகாலோபி; அவன் குடிகளிடத்தில் திறைவாங்குவதில் ஓர் முறையும், அளவும், வைத்துக்கொள்வதில்லை. பசுவின் மடியை அறுத்துப் பாலுண்பார்போல், குடியானவரின் ஊனிருக்க உயிரை வாங்குவான். பொருள் வருவாய்க்கு இடங்கிடைத்தால் அவன் எப்படிப்பட்ட பழிபாவங்களுக்கும் பின்னடைய மாட்டான். சொப்பனத்திலுங்கூட ஒருவர்க்கும் ஒரு காசு கொடுத்தறியான். தன் வயிற்றுக்குங்கூடச் சரியான ஆகாரம்போடுவதில்லை; குவிந்து கிடக்கும் பணக்குப்பையைக் கண்ணாரப்பார்த்துக்கொண்டே களித்துமகிழ்வான். தப்பித்தவறி வரும்வித்துவான்களுக்குக் கொடுப்பது, ஒன்றுமில்லாமற் போனாலும் இனிமையான வார்த்தைகளையாவது கூறுவானோ? என்றால் அதுவுமாட்டான்.

"ஈகை அரிதெனினும் இன்சொலினும் நல்கூர்தல்
ஓகோ கோடிது கோடிதம்மா—நாகோன்று
தீவினைக் கம்மியனால் வாய்பூட்டிடப்படின் மற்று
ஆ! ஆ! இவரென்செய் வார்"

என்றபடி அவன் என்ன செய்வான். வினையைவெல்ல எவராலாவது. எங்கேனுமொருயாசகரைக் கண்டு விடுவானோ? உடனே அவன் அவரைப் பார்த்து உறுமிக் குரைப்பான். வாயினால் விழுந்து கடியாமற் கடிப்பான். அந்தக்ஷணமே அவர் ஓடிப் போனால் பிழைத்தார். இல்லையேல், அவர்களைப் பேய்போற்பிடித்து, ஆட்டிக் குலைத்து, அழ அழப்படுத்துவான். அச்செயலைக்

கண்ட உலகத்தார் அவனைப்பொருள் காக்கும் பூதமென்றும் கற்பசு வெனவும் காஞ்சுரங்கனி என்றும் இகழ்ந்து பேசிக் கொள்வார்.

இப்படியிருக்கையில் ஒரு நாள், ஓர் பெரும் புலவர் அந்த உலோப வேந்தனால் அவமரியாதை செய்யப்பட்டதின் பிறகு, பிரபுவாகிய காளத்தி வள்ளலை அடுத்து,

"நின்றை நின்ற நீடிசை வள்ளால்!
உவர்க்கட லன்ன செல்வ னாட்டில்
நீர்க்கேணி அன்ன நீயுளை வியப்பே.
கார்க்கடல் கழிதழு உம் புலவினுண்டோர்
ஓர்க்கோலை நாற லுண்மையன்றே"

(ஓர்க்கோலை ஒரு வாசனைப் பொருள்.)

என அவரைப் புகழ்ந்தும் அரசனை இகழ்ந்தும் பாடினர். காளத்தி யார் அப்பாட்டின் இனிமையைக் கருதி ஏராளமான பொருள்களை அவர்க்குக் கொடுத்தனுப்பினர். புலவரும் அச்செல்வம் தமக்கு ஏழு தலை முறைக்குப்போதுமான தாகுமெனக் கருதிஊர்போய்ச் சேர்ந்தார். இதனைக் கண்ட சிலர் வேந்தனிடத்திற் சென்று விளம்ப, அந்த மூர்க்கராஜன் துர்மந்திரி ஒருவனை அனுப்பி அவ்வள்ளலை வருவித்து. "என்னை இகழ்ந்த புலவனுக்குநீரேன் சம்மானஞ்செய்தீர்? என் கீழ்க்குடியாக இருந்தும் என்னை ஒரு வன் கேவலமாகப்பாட, அதைக் கேட்கவும் உம்முடைய மனம் ஒருப்பட்டதே. உமக்குரிய குருக்கள் ஐவரில் யானும் ஒருவன் என்றதை இன்னும் நீர் அறியீர் போலும்; இது நீற்க "பொருள் தனைப் போற்றிவாழ்" என்ற பழமையான சுருதியை அறிந் திருந்தும், நீர் பாடப்பட்டவர்க்கும் படிக்கப் பட்டவர்க்குமாகப் பணத்தை யெல்லாம் வீணே கொட்டிக்கொடுத்துப், பெட்டி

கள் பலவற்றையும் வெட்டை வெளி யாக்குகின்றீரே. இதனால் உமக்கு என்ன கிடைக்கப்போகிறது? ஏழையாய்ப்போனால் உம்மை எவர் மதிப்பார்? இப்பொழுது வாங்கிக்கொண்டு போகப் பட்டவர்கள் எப்பொழுதாவது உமக்கோர் உதவிசெய்யவருவாரா? உலகத்தார் செல்வமுள்ள வர்களையே உறவு கொண்டாடித் தழுவுதலை நீர் பார்க்க வில்லையா? திரிநேத்திரதாரியான சிவ பெருமானும் தனபதியான குபேரனையே சிநேகஞ்செய்து கொண்டாரென்றால் வேறுயான் சொல்லவும் வேண்டுமோ? பணமுள்ளவனைக் கண்டால் எவர்தாம் பணியமாட்டார்கள்? அவரை எப்படிப் பட்ட பழிகளும் எட்டிப் பார்ப்பதில்லையே. "ஏழையைக்கண்டால், மோழையும் பாயும்" "எருதும் மச்சானுறவு கொண்டாடும்" என்பதும் உமக்குத் தெரியாததல்லவே. இவையன்றி இன்னுமொன்று கூட உம்மிடத்தில் சொல்ல வேண்டியதுண்டு. நீர் உள்ள பொருள்களை யெல்லாம் வாரிவாரி ஏழைகளுக்கும் தமிழ் வித்வான்களுக்குங் கொடுத்துக்கொண்டு வருவதினால் என்னை எல்லோரும் மகாபாவியான லோபி என்று, இகழ்ந்து பேசுகிறார்கள். எனக்கு இந்தப் பட்டப்பேரைச் சூட்டிவைத்த பாக்கியவாளர், நீரேயன்றி வேறொருவருமில்லை. இனியேனும் மூற்கூறிய பொருள் விரயங்களை அடியோடு விட்டொழித்துப் பசியைப் பொறுத்துப் பல்லைக்கடித்துக் கொண்டாவது பணத்தைத் திரட்டிப் பருவதம் போற் குவித்துக் கண்ணாரப்பார்த்துக் கொண்டிருப்பீராக. பணத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாலே போதுமே பசிக்கவேமாட்டாதே" என்றான்.

இவையெல்லாங் கேட்ட பிரபு அவ்வரசனது அறியாமையின் திண்ணத்தைக்கண்டு, ஆச்சரியமும், அவலமுங் கொண்டவராய்ச் சிலசொல்லலானார்.

"மன்னராண்டவர் மண்ணிலுங் கோடிமற்
றின்னும் ஆள்பவர் எத்தனை கோடியோ?"

என்றபடி, உமக்குமுன் இந்த இராச்சியத்தை எவ்வளவோபேர்கள் ஆண்டிருக்கிறார்களே அவர்களில் எவரேனும் தேடிக்குவித்த திரவியங்களில் ஒரு காசேனுங் கைக்கொண்டு போனதாகத் தாங்கள் கேள்விப்பட்டதுண்டோ? போட்டது. போட்டபடியே கிடக்க அவர்கள் போனவிடந் தெரியாமல் புகைந்து போனார்களே அல்லாமல் வேறில்லையே. "காதற்ற ஊசியும் வாராது காணுங் கடைவழிக்கே" என்ற, மேலோர் வசனத்தையும் தாங்கள் அறிவீர்களே. உலகத்தில எவரும் "பிறக்கும்பொழுது கொடுவந்ததில்லை பிறந்து மண்மேல் இறக்கும்பொழுது கொடுபோவதில்லை" புண்ணிய வசத்தால் வாழ்க்கை நாளிடையிற் கிடைத்த செல்வத்தை நல்வழியிற் செலவுசெய்து புகழையும் புண்ணியத்தையும் சம்பாத்தியம் செய்துகொள்ளாமல் பிணங்காக்கும் பேய்போல் இராப்பகல் நித்திரையின்றிப், பணத்தைக்காத்துக் கொண்டிருந்ததினால், கிடைப்பதென்னையோ?பணத்தைப்பரப்பி அதன்மேல் படுத்திருந்தாலும் அப்பணத்தாலான பிரயோசனத்தை ஒருவன் அடைந்து கொள்வானா? உப்புப்போடாத கறியை உப்புமலையின் மேலிருந்து உண்டாலும், அது உருசியாயிருக்குமா? செல்வம் ஸத்பாத்திரங்களில் உபயோகப்படுத்தப் பட்டாலன்றி, அது ஒருகாலத்தும் ஒருவனுக்குப் புகழ் புண்ணியங்களை விளைவிக்கமாட்டாதென்பது உறுதியேயாம். இதெல்லாம் அறிந்த அறிவாளிகள், கிடைத்தத் திரவியங்களை ஏழைகளுக்கும், அங்கஹீனர்களுக்கும், கல்விக்கும் கல்விகற்றோருக்கும், அன்னசத்திர சாலைகளுக்குமாக, உபயோகப்படுத்திப் பூதவுடம்பு அழியினும் அழியாத புகழுடம்பால் நில உலகில்

பிரகாசித்துக் கொண்டிருக்கிறதுமல்லாமல் மறுமையிலும் நல்வின் பத்தை அனுபவிக்கிறார்கள். உலோபிகளோ, செல்வத்தைத் தேடிப்புதைத்துச் சிறிதும் பயன் பெறுமற் சாகிறார்கள். அவர்களிற் சிலர் "ஈயார் தேட்டைத்தீயார்கொள்வர்" என்பதிற்கிணங்க, வாழ்க்கை நாளிடையில் கள்வர் முதலானவர்களாற் பறிக்கப்பட்டு வங்கிக் காலனுக்கு இரையாகிறார்கள் அரசரே! எல்லாருக்குந்தானே, புண்ணியசம்பாத்தியத்தில் புத்திபோகுமென்று நினைக்கிறீரோ? அதற்கும் பூர்வத்தில் புண்ணியம் பண்ணியிருக்க வேண்டும். பண்ணாதவர்க்குத் தருமப்பயன் எவ்வாறு கிடைக்கும்? வெறும்பானை மேலெழுந்து பொங்குமா? தருமப்பிராப்தி இல்லாதவர்க்கு அறம் என்ற சொல்லைக் கேட்டவுடனேயே, உள்ளம் படபடென்று பறையடித்துப் பதறும். அவர்கள் என்ன செய்வார்கள். விதிவலிமையுடையது. ஆதலால் அவர்களைத் திருத்தி நல்வழிப்படுத்தவும் எவராலுமாவதில்லை. அவருடைய மூர்க்க குணம் அவரைவிட்டு எப்போதும் போகவேமாட்டாது.

"ஆலைப் பலாவாக்க லாமோ அருஞ்சுணங்கன்
வாலைநிமிர்க்க வசமாமோ—நீலநிறக்
காக்கைதனைப் பேசுவிக்கலாமோ கருணையிலா
மூர்க்கரைச் சீராக்கலாமோ."

என்றார் பெரியோரும். "அடியேன் கையோ சிறுபருவமுதற் கொண்டே, பாவலர்க்கும் இரவலர்க்கும், கொடுத்துக் கொடுத்து நீண்டேபோய் விட்டது. அது எப்படிக் குறுகும், பாடினவாயும் ஆடினகாலும் நிற்குமா? மேலும் அந்த ஈகைக் குணம் இவ்வேழைக்குப் பிறவிக் குணமாயிருக்கிறதே அக்குணம் இடையில் என்னை விட்டு எப்படி நீங்கும். பிறவிக் குணத்துக்கு மட்டை வைத்துக் கட்டுவாருண்டா? எனது கொடைக்குத் தடைசெய்

கிறீர். நான் தங்களுக்கு என்ன அபராதம் பண்ணினேன். கொடுப்பாரைத் தடுப்பாரடையுங் கதியை விரித்தால் அது இங்கு அடங்குவதில்லை. ஆதலால் கருணை செய்து எப்போதும் போல அடியேன் இயன்றவாறு ஈகைபுரியவும்.

"பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக்
கேடுகெட்ட மானிடரே! கேளுங்கள் கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் பாரே அனுபவிப்பார்
பாவிகாளந்தப் பணம்."

என்பதற்கு இலக்காகாமல் ஈத்துவக்கும் இன்பத்தை இனியேனும் தாங்கள் அனுபவிக்கவும்; மிகவும் தாழ்மையாக கேட்டுக்கொள்வதோடு இனியும் இவ்வெளியேன் கூறப்போவதான, உலோபரைப் பற்றிய இரண்டு சரித்திரங்களையும், சிறிது செவிசாய்த்தருளுமாறும், பிரார்த்திக் கின்றேன்; என, மன்னன் மௌனஞ்சாதிக்கப், பிரபு, வசனிக்கலாயினர்.

நவநிதியுஞ் செழித்துள்ள, அவந்தியம்பதியில், அந்தணனொருவ னிருந்தான். அவன் நிதியாலும் விளைநிலங்களாலும் தோற்ற ஏற்றங்களினாலும், ஓர்சிற்றரசனுக்குரிய அங்கமெல்லாம் பொருந்தின வனாயுமிருந்தான். தன்னாலும், தனது மூதாதையராலுந் தேடிக்குவித்த திரவியத்தின் மேலிருப்பவனாயினும், அவன் "பெற்ற சிறுகப்பெருது பெரிதுள்ளும்" பேயனாதலால், மேலுமேலும், பொருட்பொருக்கஞ் செய்தலிலேயே தலையிட்டுச் சிறிதுஞ் சடையாதுழைத்துக்கொண்டு வந்தான். நாளடைவில் பொருளாசை அவனுக்கு மிகவும் அதிகரித்து விட்டது; அதனால் அவன் தேட்டுக்குரிய செந்நெறி தெரியாதவனாய் விட்டான். "கொக்குக் கொன்றே மதி" என்றவாறு, செல்வத்திலேயே சிந்

தையைச் செலுத்திய, இவன் செய்தபழிபாவ அசத்தியங்களுக் கோரளவேயில்லை. ஆசையால் ரோசமின்றி. இப்படி இவன், கோடிக்கணக்கில் தேடிக்குவித்த திரவியங்களை யெல்லாம். வீட்டுக்குள் வெட்டிப் புதைத்துப் படுக்கையு மிருப்பும் அதன்மேலிடமாகவே பயின்றான். அவன் "அறம்" என்ற சொல்லைக்கூட உச்சரித்ததில்லை. ஈகை என்ற சொப்பனமும் கண்டிருக்க மாட்டான். வறியரைக்கண்டால் வெறியனைப்போல் வைது கல்லெடுத்தெறிவான். வித்துவானையும் எத்துவான். மேலும் அவன்

"கரமிருந்து மிலனானன் கண்ணிருந்துங்
குருடானன் கடந்து செல்லுஞ்
சரணிருந்து முடனானன் காதிருந்துஞ்
செவிடானன் தடக்கையேந்தும்
இரவலர்க்கங் கீவதற்கு மின்னருளினேக்
குதற்கு மெழுந்து சென்று
பரவுதற்கு மவர்மொழியும் பழங் கண்மொழியிற்
சிறிது பற்றற்கும்மே"

அன்றியும் அவ்வந்தணன்,

"எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து"

"தனத்துக்கு வேலிதர்மம்" என்னும் அனுபவசித்தமான சுருதிகளையும். அலக்ஷியம் பண்ணினவனாய்,

"நிலையான உறவினரும் நிறையான நட்பினரும்
நெறிநின் றோரும்
அலையாத பெரும்புகழும் ஆகமபுராண
முதலறிவு மெய்ம்மை

குலையாத பெருந்தவமும் குன்றாத மெய்ஞ்ஞான
குருவும் யார்க்குந்
தலையான பரசிவமும் பெறுவீடும் பொருளெனவே
தருக்குற்றானல்''

இவ்வண்ணம் விப்பிரன் செருக்கித் தலை கவிழ்ந்து, எச்சுக்கை கொண்டு காக்கை ஓட்டாத வனாயிருந்தும், அவனிடத்திலும்,

''ஆகாதெனினும் அகத்துநெய் உண்டாயிற்
போகா தெறும்பு புறஞ்சுற்றும்—யாதுங்
கோடாஅரெனினும் உடையாரைப் பற்றி
விடாஅர் உலகத் தவர்''

என்றதற்கேற்ப, சிற்சில இரப்பாளியர், சூழ்ந்து உறவு கொண்டாடத் தொடிங்கினர். அவர்களை யெல்லாம் அவன் சில நாளில் இலவுகாத்த கிளியாக்கிவிட்டான். இவனை நல்வழிப்படுத்த, அந்நாட்டிலுள்ள அறிவாளிகள் எவராலும் ஆகாமற் போயிற்று. அவர்கள் அவன் தேடிக்குவித்த திரவியத்தைச் செத்தபிணமெனவும், அது புதைந்து கிடக்கும் அவனகத்தைச் சமாதித்தலமெனவும், அதன்மேல் வீழ்ந்து கிடக்குமவனை அரிய ஓர் பிரமரக்ஷசு எனவும், கூறி வெறுப்பாராயினர். ''கொடாதகண்டன்'' என்றோர் பட்டப்பேரும் அவனுக்குக் கொடுத்தனர். கண்ட இடமெல்லாம் அவனை ''ஈயாப்பித்தன்'' என்றிகழ்ந்து பேசலாயினர். என்னசொன்னாலுந்தா னென்ன; அவன் இதற்கெல்லா மிளைத்தவனா? செத்தாலும் எலும்பெலும்பாய்க் கழிந்திட்டாலும், சேர்த்ததிரவியத்தில் தினையளவும் பிறர்க்கீயவே மாட்டேனென்று, சாதித்தேபோட்டான்.

இப்படிப்பட்ட கொடாத கண்டப் பிரபுவினிடத்திற், சில விடாதகண்டப் புலவர்கள்வந்து பாடிப்பரிசுபெறுமலே திரும்பிப்

போனார்கள். அதனையு மிங்குச் சுருக்கமாய்க் கூறுகின்றேன்; தயவுசெய்து கேட்டருள்வீராக.

ஒருநாள் ஒரு வித்வான், தன்வீட்டுப் புறந்திண்ணையில் வந்திருத்தலை, அந்த உலோபப் பார்ப்பான் பார்த்து,

பார்ப்பான்—"சிற்றெறும் போடீயும் அணுகாத எனதகத் திண்ணையினிடத்தினேறித், திறனுடனிருக்கின்ற தாரையா"

வித்வான்—"செல்வமிகுதேன்மாரியூரில் யானோர் வெற்றி மிகுகவி."

பார்ப்பான்—"ஆயின், நோக்குறும் போழ்திலுன்மேனியப் படிக் காணபே.?."

வித்வான்—"வேறொன்று மெண்ணலை நாவலன்."

பார்ப்பான்—"எனிற்பதில் வீறுடனிசைப்பதேது."

வித்வான்—"கற்றவுயர் வானபுதன்."

பார்ப்பான்—"ஆயிடிற் காண்பரிது, கண்டாலுமதிகமோசம்.

வித்வான்—"கழறுமொரு பண்டிதன்."

பார்ப்பான்—"ஆயின், இப்பொழுது நீ கடியசத்துரு வல்லவோ? ஆதலால் நீ இங்கு நிற்றலுங் கூடாது" என்று அப் புலவரைக்கைகொண்டு அப்பால் தள்ளிவிட்டான்.

அப்பால் மற்றொருபுலவர் அவ்வேதியனை நோக்கி,

வித்வான்—"உயர்வான கற்பகம் சுரபி சிந்தாமணியை ஒக் கின்றவா! ஈகையால், உவமையில் கன்னனே! மெய்யரிச் சந்திரா! உன்பரிசுமேவ வந்தேன்; தயவெடுத்தருள்."

பார்ப்பான்—"என்ன, ஓது கவிராஜ! உட்சதிகொண்டு வைதல் நன்றோ?"

வித்வான்—"தனத! அப்படி யொன்றும் வையவில்லை முனியலென்?"

பார்ப்பான்—"சரி சரி! மறைத்தென்னை நீ, வியனருமா மென்று மாடென்று சிலையென்று வீக்கியது நிற்க? மேலும், வேசை மகன் என்றையா? யானில்லை. மனையாளை விற்று விலை நீ மேவுபோ!! என விபரீதப்பொருள் கொண்டு வாய்க்குவாரா ததை வழங்கி அப்புலவரை அப்பாற் செலவிடுத்தனன்.

இன்னுமொரு வித்வான் அவனை நோக்கி,

வித்வான்—"விள்ளு மொரு வள்ளலே! சுகமோ?"

பார்ப்பான்—"விழித்துனை விழித்தெதிரினின்று கண்டும், வினவலென்?"

வித்வான்—"மனைமக்கள் யாவரும் க்ஷேமமோ?"

பார்ப்பான்—"வியாதிதனை ஏவுவீரோ?"

வித்வான்—"தள்ளரிய ஈகையுளனீ யெனக் கேட்டுனைச் சார்ந்திங்கடுப் பவந்தேன். தயவுசெய்தருளென்ன."

பார்ப்பான்—'நாவலா! என்கையிற் சாற்றவொரு இரண மில்லை. கொள்ளினெடு கூழுணுவன் அவ்வேளை மனையாட்டி, கோலாகலக் களிப்பால், குமுக்கென்ற ருதடுத்திரட்டிடுவள் சிவிறி கொடு கொள்ளுமோ ஈகையப்பா."

எனச்சொல்லி அப்புலவரை அவ்விடத்தை விட்டு அகற்றி விட்டான். இப்படி. எத்தனையோ வித்துவான்களையும், யாசகரை யும் அவமானப் படுத்திவிட்டான். விரித்து விரித்துச் சொல்வ தென்ன, அவன் வாயில் வருவது, இல்லையென்ற தன்றி எதுவு மில்லை.

இவ்வாறு அந்த உலோபப்பார்ப்பான், வைக்கோலின் மேற் கிடந்தசுவானம் போல், வைப்பின் மேற்கிடந்து, காலந்தள்ளி வருகையில், அந்நாட்டிற் கருப்புக்காலம், நெருப்புப் பொறி போற்பற்றி எரிக்கலாயது. சிலமாதங்களாய், காலை மாலைகளில் மப்பும் மந்தாரமுமன்றி, வானத்தினின்றும், ஓர் துளி கூடப்பூமியின்மேல் விழவே இல்லை. அதனாற் புல்விழந்தது காடு. நெல்விழந்தது நாடு. ஆறுங்குளமும் நீரின்றிமணலும் சேறுமாய் வறண்டன. நெல்லும் பொன்னும் நிறையால் ஒத்தது. அதனாலே உலகத்திலுள்ள பிராணிகளின் உணவு குறைந்தது. அக்காரணத்தால் அவை உடல்மெலிய உயிருமிளைக்கலாயின. சீனியைப்போட்டுப் பாலைப்பானம் பண்ணுபவர், உப்புப்போட்டுண்ணக் கூழுக்காலாப் பறந்தனர். செல்வரெல்லாம் வறியராக, வறியரெல்லாம் பசிஎன்னும் தீயால் எரியலாயினர்.

இப்படிப்பட்ட கொடும்பஞ்சத்தில் அந்நாடு நகரங்களிலு ள்ளார் யாவரும் படாதபாடுபட, அந்த ஈயாதவேதியன் மாத் திரம், எட்டுணையும் இளைப்பும் விசாரமுமில்லாதவனாயிருந்தான். அவனுடையபொற்குவையும், நெற்குவியலும் சிறிதுங்குன்றில. அக்காலத்தில் அவனை அடுத்துக், கடன் கேட்டு அவமானப் படாத, மேலோரும், பிச்சைகேட்டு, அவன் வாயெச்சிலால் நனையப் பெறாத முகைத்தையுடைய கீழோரும் அந்நாட்டிலெங்கு மே இல்லை. காலவிரோதத்தால் அந்நாட்டரசனும், அவனை ஒரு

மனுசனாக அப்பொழுது பாவித்தும், பலன் பெற்றானில்லை.

"பசிவந்திடப்பத்தும் பறக்கும்" என்பர் பெரியோர். ஆதலால் பசிப்பிணி பொறுக்கமாட்டாத, அந்நாட்டி லுள்ளார் யாவரும் ஒன்றாய்க்கூடி. அந்தக்கொடாத கண்டன் வீட்டைக்கொள்ளை கொள்ளத்துணிந்தனர். அஃதறிந்த அவன், அடைத்த கதவுதிறவாமலேயிருந்தான். இருந்தாலென்ன, காப்பது பெரிதா? கவருதல் பெரிதா? எவ்வாறோ, சிலர் இரவில் அவன் வீட்டிற் புகுந்து, வேதியனைத்தூணோடு சேரப்பிணித்து, கையாலுங் கழியாலும் நையப்புடைத்து, அவனுக்குரிய தனதானியங்களிற் சிலவற்றைச் சுமை செய்து கொண்டுபோய் விட்டனர், பொழுது புலர்ந்ததும், அரசன் ஏவலால் அவ்வூர் முழுவதும் அவன் அகத்தைச் சூறையாடின. இங்ஙனம் ஜெங்கமப் பொருளெல்லாம் போக, மற்று தாபரங்களையும், வேந்தன் முறைப்படி கைப்பற்றிக் கொண்டான். வீடும் தீக்கிரையாயிற்று.

இது மகாபாரதத்திலுள்ள கதை

"கட்டியடிப் போர்க்கும் கண்மீதி லேற்றுவோர்க்கும்
எட்டியடிப் போர்க்கும், ஈவரே—திட்டமுடன்
பாடுவோர்க் கீயாதார் பல்லுதிரத் தாடைதனிற்
போடுவோர்க்கீவார் பொருள்"

என்ற ஆன்றோர் வாக்கியம், பொய்க்குமா? அப்பாலந்த உலோபப் பிராமணன், நிற்கநிழலும், உண்ணச்சோறும், உடுக்க உடையுமில்லா தவனாய், ஊரெல்லாம் பிச்சை ஏற்கத் தலைப்பட்டான். சிறிது காலத்திற் பஞ்சமும் நீங்கியது. முடிவில் ஓர் துறவி, ஞானோபதேசம் செய்து, அந்த விப்பிரனைச் சுப்பிரனாக்கினன் என்பவர்.

தமிழ்நாட்டில் ஓர் ஊரில், ஒன்பது கோடி திரவியத்துக் கதிபனும், மஹாகிருபண சிரோன்மணியுமான ஓர் பணக்காரனும், ஒன்றுமில்லாத ஓர் ஏழையும், அண்டைவீட்டுக்காரராய் வசித்து வந்தார்சள். அந்த எளியோனிடத்தில் யாராவது, "உனக்கென்ன சொத்துள்ளது" என்று கேட்டால், அதற்கவன் "ஒன்பதுகோடி திரவியமிருக்கிறது" என்று சொல்லுவான். இப்படி இவன் வெகுநாளாய்ப் பலரிடத்திலுஞ் சொல்லிக்கொண்டுவருதலை, அடுத்த வீட்டு லோபதனிகன், கண்டு இவன், நம்முடைய செல்வத்தையே சுட்டி, தன்னுடையதாகச் சொல்லிக்கொண்டு வருகின்றானே யன்றி வேறில்லை யென்றும், இனிமேலுமிவனை இவ்வாறு சொல்லவிடுவோமேயானால், ஒருவேளை நமக்குரிய செல்வமெல்லாம் அவனுக்குப்பாத்தியப்பட்டுப்போனாலும் போகுமெனவும், இவ்விவாதம் முளைப்பதற்கு இடங்கொடுக்கக்கூடாதெனவும்துணிந்து ஞாயாதிபதியினிடத்தில்விண்ணப்பஞ்செய்து கொள்ள, நீதிபதியும், அவ்வேழையை வருத்தி, "உனக்குரிய ஆஸ்திகளைக்கூறுக" என, இல்லாதவன் சொல்லலானான்.

"ஓ நீதி அதிபரே! எனக்கு ஒன்பது கோடி திரவியமுளது. அதனை என் வீட்டுக்கடுத்த மற்றொரு வீட்டிற் புதைத்து வைத்திருக்கிறேன். எப்படிப்பட்ட கள்வராலுமதனைக்கவர முடியாது. ஏன் என்றால், காவல் வெகு கடுமை. காப்பாளன் இரவும் பகலும் இமைத்தல் கூடச் செய்வதில்லை. அப்படிக்காக்கும் அவனுக்குச் சம்பளமுமில்லை; அப்பணத்தின் வாசனை தான் ஒருகாசு கூட அவன் அதிலிருந்து எடுக்கவேமாட்டான். மிகவும் நம்பிக்கைதான். ஆனால் அப்பணம் எனக்கு எந்தக்காலத்திலும் அவசியமாகவுமிராது" என்றான்.

இவையெல்லாம் புன்னகையுடன் கேட்ட நியாயாதிபதி,

ஈயாதவனுடைய வாய் மொழிகளையுங் கேட்டுவிட்டு மீண்டும் அவ்வறியோனை நோக்கி, "அன்னியன் செல்வத்தை உன்னுடைய தென்று நீ எவ்வாறு கூறினாய்" என்று கேட்க, அதற்கவன், "ஐயா! அப்பொருள் அவனுக்குச் சொந்தமானால், அதிலிருந்து, ஒருகாசாவது எடுத்துத்தனக்காவது பிறருக்காவது உபயோகப்படுத்தும்படி உத்தரவளிக்க வேண்டுகிறேன்; அவன் அப்படிச் செய்வானோ பார்ப்போம். ஒரு காலத்துஞ் செய்யவே மாட்டான். ஆகவே அச்செல்வம் அவனதாவதெப்படி? அதனாலே தான், அவன் தனக்கு அந்த நிதியைப் பற்றி எவ்வளவு சம்பந்த முள்ளதாகச் சொல்கிறானோ, அவ்வளவு சம்பந்தமும் எனக்கு முள்ளதாக நானுஞ் சொல்லிக்கொண்டேன். இது ஒரு குற்றமாகுமா? என்றான். உடனே நீதிபதிக்கு உண்மை விளங்கிற்று. அப்பால் அவர் அந்த லோபியை நல்வழிப்படுத்தத் திருவுளங் கொண்டவராய், அவனை அருகிலழைத்துச் சில செப்பலாயினர்:—

"ஓ தனிகரே! புண்ணியவசத்தாற் கிடைத்த செல்வத்தை, சத்பாத்திரங்களிற் செலவிட்டுத்தாமும் அனுபவியாமலிருப்பவரையே உலகத்தார் உலோபிகளென இகழ்ந்து பேசுகின்றனர். நாடோறும் மெய்வருந்தத்தேனீயைப் போலும், சிற்றெறும்பைப் போலும், தினைத்துணை யளவாகத் தேடித் தேடிப் பனைத்துணை யளவாகப் பருக்கக்குவித்த, பணத்தாலான பிரயோசனத்தைச், சிறிதும் அடைந்து கொள்ளாமல் வீணே பாந்துக்குவார்த்த பாலாக்குவதென்ன அறிவேயோ?. ஓபொருளாளரே! உலகத்தில், மக்களாய்ப்பிறத்தலே அருமை, அதனினுமிக்க அருமை, செல்வமும், அறிவும், ஜீவகாருண்ணியமும் உள்ளவராய் ஜெனித்தல். நீரோ, முன்னைய திரண்டும் நிரம்பப்பெற்றுளீர். அதுபோற் பின்னையதும் வாய்க்கப் பெறுவீரேல், உம்மினுயர்ந்தவர் உலகத்தி

லொருவருமேயிராரென்பதுறுதியேயாம். வாழ்க்கை நாளிடைப் பட்டு வருஞ்செல்வத்தால், தன்னுடைய வயிற்றை மாத்திரம் பருக்கும்படி செய்துகொள்ளப் பட்டவன் எவனோ அவனே, இப்பூமிக்குப் பெரும் பாரமாகக் கருதப் படுகிறான்.

"பருத்திப் பொதியினைப் போலே வயிறு பருக்கத்தங்கள்
துருத்திக் கறுசுவை போடுகின்றார் துறந்தோர்கள் தமை
வருத்தியமுதிட மாட்டாதவரையிம் மானிலத்தில்
இருத்திக்கொண் டேனிருந் தாயிறைவாகச்சியேகம்பனே"

என்றார் சான்றோரும். ஆகையால் இனியேனும் சேர்த்த திரவியத்தைச் செவ்வையான நெறியிற் செலவிட்டுப் பிறந்த பிறவிக்குரிய பிரயோசனத்தைக் கைக்கொள்வீராக. இல்லையேல், பொருளைப் பரித்துக்கொண்டிருக்கும் உமக்கும், பொதியைத் தரித்துச் செல்லுமிருகத்திற்கு முள்ள வித்தியாசம், உருவத்தா லன்றி மற்றெவ்வழியாலும் அறியப்படாது போம்" என்றனர்.

ஓ காவலரே! இவையெல்லாங் கேட்டும் அந்தப்பணக்காரப் பிணம் முன் போலே தானிருந்தது. பிற்காலத்தில் அவனுடைய நிதியைக் கள்வரும் வீணரும், விடருமாகப் பங்கிட்டுக் கொண்டனர்.

"எனதேன தேன்றிருக்கு மேழை பொருளை
எனதேன தேன்றிருப்பன் யானுந்—தனதாயின்
தானுமதனை வழங்கான் பயன் துவ்வான்
யானு மதனையது"

என்ற மேலோர் வாக்கியத்தையும் இங்குக் கவனிக்கத்தக்கதே ஆகும். எனக் கூறிமுடித்தனர்.

பால் பாம்புக்கு விஷமாக மாறுவது போல், அந்த உகாரி சொன்ன சொற்களெல்லாம், அவ்வறிவற்ற வேந்தனுக்கு, விபரீதமாகவே பட்டன; ஆதலால் அவன் அவ்வள்ளலைச் சினந்து சீறி, "அடா அறிவு கெட்டவனே! நீயோ எனக்குத்தர்மோபதேசஞ் செய்வது? அப்பாற்போ, உனக்கு ஏற்ற தண்டனையை வெகு சீக்கிரத்தில் விதிப்போம்" என்றவுடன் பிரபு தன்னிடம் சார்ந்தனர்.

அவருக்கு வைத்திய ரொருவர் பாலிய சிநேகம். அவர்கள் ஒருவரைவிட்டொருவர் பெரும்பாலும் பிரிந்திருப்பதில்லை. அந்த அந்தரங்க நேசரிடத்தில்: தாம் அரசனிடத்திற் சென்றது முதல் மீண்டது வரையுள்ள விருத்தாந்த மெல்லாஞ் சொல்லித்துக்கித்தார். ஆயுள் வேதியும் அவரைப் பல சமாதான வார்த்தைகள் சொல்லித் தேற்றினர். முடிவில் காளத்தியார் பண்டிதரைநோக்கி "ஆப்தரே! அந்த அறிவுகெட்ட கொடுங் கோலரசன் என் பேரில் மிகவும் அடம் வைத்துக் கொண்டிருக்கிறான். அவன் வெகு சமீபகாலத்தில், எனக்காவது என்னுடைய ஆஸ்திக்காவது கேடு செய்யாமலிருக்கப்போவதில்லை. அப்படி அவன் செய்ததின்பிறகு வரும் அவமானத்தைக் கணப்பொழுதும் நான் பொறுக்க மாட்டேன். "மானம்படவரின் வாழாமை முன்னினிதே" என முதியோரும் மொழிந்துளார். ஆதலால் தாங்கள் எனக்கு உண்மையான நட்பாளராயின், அந்தக்காலத்தில் ஒரு பொழுது உண்டவுடனே உயிரை வெகு சீக்கிரம் வாங்கத்தக்க மருந்தொன்று இப்பொழுதே கொடுத்து வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். எனலும், மருத்துவர் மானமே ஜீவனாகக் கருதியிருக்கும் அந்த மகாப்பிரபுவின் உத்தம குணத்தைத் தம்மனதுக்குள் மிகவும் வியந்து கொண்டு ஒரு சிறு குளிகையை அவர் கையிற் கொடுத்து

"இது உமக்கு ஏற்றதோர் நல்ல ஒளஷதமாகு" மென்றார். அவரும் அதனை வந்தனத்துடன் வாங்கிப் பத்திரப் படுத்தி வைத்தார்.

இப்படியிருக்கையில் ஒரு நாள் அந்த மதிகெட்ட காவலன் காளத்திவள்ளலின் கொடை நாளுக்கு நாள் அதிகப்படுதலையும், அதனால் தனக்கு அபகீர்த்தி அபரிமிதமாய்ப் பெருகுதலையும் கவனித்து அவர் குடியிருக்கும் வீடு தவிர மற்றைய நிலங்களை முதலான ஸ்தாபர ஜங்கமங்களெல்லாவற்றையும் பறித்துக் கொண்டான். என்ன செய்வார் பிரபு? சுற்றுடை இன்றி மற்றுடை இல்லாதவரானார். "வித்வான்கள் வருவார்களே, எம்மை ஒரு மனுஷனாக நினைத்து, அருமையான தமிழ்ப் பாடல்களைப் பாடுவார்களே, அவருக்கு நாம் என்ன செய்வோம்" என்ற விசாரமே அவருக்கு மேலு மேலும் வருத்துவதாயிற்று. "இல்லை என்று யாசிப்பவர்க்கு இல்லையென்று சொல்வதைப் பார்க்கிலும், இறந்து போதலே மேலானது. அங்ஙனம் இறக்கத் துணியாதவர் அவ்வூரை விட்டாவது போய்விடல் வேண்டும். அப்படியும் போக மனமில்லாதவர்களே, உலகத்தில் உலோபிகளான பாவிகளென்று இகழப்படுகின்றனர்" எனப் பற்பலவாறுஎண்ணி நெஞ்சம் புண்ணுனார். முடிவில் அவர், அவ்வூரைவிட்டுப் போதலே தகுதி என மதித்தனர். இரவானதும் அவர் அந்த நின்றவூரினின்றும் நீங்கி, அடுத்துள்ள ஓர் ஊரிற் சென்று பிரயாணிகள் தங்கும் சத்திரத்தில் ஓர் மூலையிற் படுத்து, தன்னுடைய கதியை அவ்வாறாக்கின விதியை வெறுத்து ஏங்கி உறக்கமில்லாமலிருந்தார். வள்ளலை யிழந்த அந்தத் திருநின்றவூர் திருச்சென்ற ஊராகப்பொலிவிழந்திருந்தது.

இவர் இப்படியிருக்கையில் அங்கு வேறோர் மூலையில் வெகு

தூரதேசத்திலிருந்து நடந்துவந்த களைப்பாலும் ஆகாரங்கிடைக்கப் பெருமையினாலும் காலுங்கையுங் குரக்குவலிக்க உருண்டு கொண்டிருந்த ஓர் புலவர், தன்னைவிடாது பற்றித்தொடர்ந்து, வருத்தப்படுத்திக் கொண்டிருக்கிற தரித்திரத்தை முன்னிலைப்படுத்தி

"நீளத்தொடர்ந்தாயே நீங்கா நிழல்போல
நாளைத்தொடர்வாயோ நல்குரவே—காளத்தி
நின்றைக்கே சென்றுவிட்டால் நீயெங்கே நானெங்கே
இன்றைக்கே சற்றே இரு."

என,ஓர்பாடலைப்பாடினர்.அதுகேட்டார் காளத்தியார்."ஹா ஹா! என்னகவி! என்ன இனிமை! அக்ஷரலெக்ஷங் கொடுத்தாலும் போதுமானதாகாதே. இப்படிப்பட்ட செய்யுளைச் செவியாரக்கேட்டும் புலவரைக் கனகாபிஷேகம் செய்துவைக்கும் பாக்கியம்பெறாமற் செத்தபிணம்போல் இன்னும் இங்குக்கிடக்கின்றேனே. இவ்வளவுதூரம்வந்த இந்தப்பாவலர்நாளைநின்றைக்குச்சென்று நம்மைக் காணாமல் தவிப்பாரே. அக்காலத்தில் அவர் என்னைப்பற்றி என்ன நினைப்பாரோ? ஏதுசொல்வாரோ? வைவாரோ? வாழ்த்துவாரோ? வேறு என்னதான் செய்வாரோ? எல்லாங்கடவுளுக்குத்தான் வெளிச்சம். இனி யான் உயிரோடு உலகத்திலிருந்து என்ன பிரயோஜனம்? இறந்துபோதலேதகுதி"எனத்தீர்மானித்தவராய்ப் பொழுது விடியுமுன் எழுந்திருந்து, விரைந்து நின்றையூரிற் சென்றார். தன் வீட்டின் தோட்டத்திலுள்ள, தினந்தினந் தன்னால் பால்வார்த்து வளர்க்கப்பட்ட தெய்வீகநாகம் வசிக்கும் புற்றுக்குள்ளே கையைநீட்டினார். நீட்டவே அக்கையை அரவம் மகாத்தியாகியாகிய காளத்திப்பிரபுவின் கனகமழைபொழியும்

கமலமலர் என மதித்து, தனது இரத்தினத்தை அவர் உள்ளங் கையிற் கக்கி முத்தமிட்டுப் போயிற்று. உடனே அவர் சூரிய காந்திபோற் பிரகாசிக்கிறதும் விலைமதிக்க முடியாததுமான அந்த ரத்தினத்துடன் வீட்டினுள் வந்திருக்கையில் அந்தக் கவிவாணரும் வந்தார். பிரபு வின்மேற் சொல்மாலை பல தொடுத்தார். வாழ்த்தினர் எல்லாங்கேட்டுக் காளத்தியாருங் களிப்பின் மூழ்கி, புலவரை உபசரித்து ரத்தினத்தைப் பரிசுகொடுத்து, ஓ கவிராஜ சிரோமணியே! தாங்கள் கூறிய பாவினங்களிலுள்ள ஒரு பதத்திற்குங்கூட என்னுற் கொடுக்கப்பட்டசம்மானம் பற்றுவதில்லை. ஏதோ அற்பங்கொடுத்தேன். அனந்தமாகப் பாவித்துக்கொள்ள வேண்டுகிறேன் என்றார். நாவலரும். அவர்கொடையைப்பற்பலவிதமாகப் புகழ்ந்துபேசி, அவரிடத்தில் விடை கொண்டு, அந்தஉலோப வேந்தனிடத்திற் சென்று பரிசுபெற்ற ரத்தினத்தை விலைபேசினர். அவனும் அதன் அருமையை நன்றுயறிந்தவனுதலால் தக்கவிலை கொடுத்து அந்த ரத்தினத்தை வாங்கிக்கொண்ட தோடு, அது அவருக்குக்கிடைத்த விருத்தாந்தத்தையுந் தெரிந்து, அடுத்திருந்த மந்திரிகளை நோக்கி "இது போலும் இரத்தினங்கள் இன்னுங் காளத்தியாரிடத்தில் இருக்கக்கூடும். நீங்கள் சென்று பறித்து வாருங்கள்" என, அவர்களும் பிரபுவை அடுத்துக்கேட்டனர். அதற்கு வள்ளல்பாம்பு கொடுத்தது என்றனர். அமைச்சர் "நீர் சொல்வது எங்களுக்கு நம்பிக்கையில்லை. அப்பாம்பு ஜீவரத்தினத்தையும் நீர் கேட்கக் கொடுப்பதைக் கண்டாலன்றி எங்களுக்குச்சந்தேகம் நிவர்த்தியாகாது" என்றனர் உடனே அந்த உதாரி அவர்களைப் புற்றண்டை அழைத்துப்போய் அரவத்தை அழைக்க, அதுவெளிப்பட்டு அவரைவணங்கியது. அப்பால் அவர் அதனைநோக்கி "ஓ தெய்வப்பாம்பே! நீ முன் எனக்கு உனது ரத்தினத்தைக்கொடுத்தது

உண்மையானல் ஜீவரத்தினத்தையும் இப்போதுகொடு பார்ப்போம்'' என்றவுடன் அது பிராணுதாரமான ஜீவமாணிக்கத்தையும் பிரபுவின் பாதத்திற் கக்கிவிட்டுப் பிராணனை விட்டது. அது கண்ட அமைச்சர் திடுக்கிட்டு, அவ்வள்ளலை ஏறிட்டுப் பார்க்கக்கூடச் சக்தியற்றவராய் அரசனிடத்தில் வந்து நடந்தனவெல்லாம் விரித்துரைத்தனர். எல்லாங்கேட்டுக் காவலனும் உள்ளம் பதறினன். அந்தக்காளத்திப் பிரபுவை ஓர் தெய்வபுருஷனெனத் தீர்மானித்தான். அவன் சொன்ன புத்திமதிகளை உதாசீனஞ்செய்தது மல்லாமல் அவரை வெறுத்துக் கூறினதையும் எண்ணி எண்ணி மனநொந்து பச்சாதாபப்பட்டான். செய்த அபராதத்தை மன்னிக்கும்படி கேட்டுக்கொள்ளவும் முன்போல் பிரபுவாக வீற்றிருந்து, தமிழையும் தருமத்தையும் சத்கீர்த்தியையும் இஷ்டப்படி அவர் விருத்திசெய்து கொள்ளுதலைக்கண்டு களிக்கவும் தீர்மானித்தவனய் மந்திரிமுதலான உத்தியோகஸ்தர்களையும் மற்றுமுள்ள பரிவாரங்களையும் அழைப்பித்து, "நீங்களெல்லோரும் யானை சேனை முதலிய சகலவிருதுகளுடன் திருநின்றவூர்சென்று, நமது காளத்திவள்ளலை வணங்கி உபசரித்து, நமது தங்கப்பல்லக்கில் அவரை யேற்றுவித்து, வாத்தியங்கள்கோஷிக்க விரைவிலிங்கு அழைத்து வருவீராக" என, ஆஞ்ஞாபித்தனன். அவ்வளவில் அவர்களும் நின்றையை நோக்கி வழிக்கொள்வாராயினர்.

பிரபு, அரசசேவகர் ஜீவமணியைக்கொண்டு சென்றவுடன் "கொடுங்கோலரசன் வாழுநாட்டிற் கடும்புலி வாழுங்காடுநன்றே" என்றபடி "இனியிந்த மறமன்னவன் கீழிருந்து வாழ்வதைப்பார்க்கிலும், காட்டிற்சென்று, காலந்தள்ளுதல் சாலவும் நலமாகு" மென்று. துணிந்தவராய், வடதிசைநோக்கி நடக்கலானர். சாதம்

17850

அரை சென்றார் வெய்யிலின் கொடுமைக்காற்றாமல், அங்கோர் ஆலமரத்தடியில் ஒதுங்கினர், அவ்விடத்தில் ஒருவர் தொலைதூரம் வழிகடந்த இளைப்பாலும், பசியாலுண்டாகுங்களைப்பாலும் மயங்கிக்கிடந்தலைப்பார்த்தார். இரக்கங்கொண்டார். அவர் பக்கத்திற் சென்று "ஐயா, உமக்குஎவ்விடம்? எங்குச்செல்கின்றீர்" என அவர் "யானொருபுலவன் ஜன்மதரித்திரன். காளத்திவள்ளலைக் கண்டு கலியைத்தவிர்த்துக்கொள்ள இவ்வளவுதூரம் வந்துவிட்டேன். விரைவாய்ச்சென்று அவரைக் காணக்கூடாதபடி தடுக்கின்றது என்னைப்பற்றியிருக்கின்ற இப்படுபாவி தரித்திரம்" என்று சொல்லிவிட்டு இல்லாமையை எதிராக்கி

"என்கூடவே பிறந்தாய் என்கூடவே வளர்ந்தாய்
என்கூடவே யிங்கு மெய்திட்டாய்—மன்கூடும்
நின்றைக்கே வந்துவிட்டேன் நீள்கலியே என்முகத்தை
என்றைக்கே காண்பா யினி"

எனச்சொல்லி முடித்தனர். கேட்டார் காளத்தியார். "ஓகோ இவர் முன்னயவரினும் எல்லாவிஷயத்திலும் மிகப் பெரியவராகத் தென்படுகின்றாரே, என்னசெய்வோம் என்னை உத்தேசித்து, இவ்வளவுதூரம் வந்தேன் என்று சொன்னாரே அச்சொற்கேட்டும் என்னுடலைவிட்டு உயிரின்னும் நீங்கவில்லையே. என்னவல்வாணள், எப்படியும் இவர்க்கு முன்போய் இறந்து விட்டாலன்றி எனது மனத்துயர் ஆறவே மாட்டாது" என்று ஊரை நோக்கி விரைந்தார் வழியில் ஒரு வியாபாரியிடத்தில் சவ்வீரத்தை மருந்துக்கென்று வாங்கி உட்கொண்டார். வீடுபோய்ச் சேர்ந்தார். விஷத்தின் வீரம் சிறிது சிறிதாகக் குடலை எரித்துக் கொண்டிருந்தது. நோவுமதிகரித்தது. வயிற்றோட்டமும் வாயிலெடுப்பும் ஆரம்பித்தன. என்றாலும், உயிர்நீங்க வெகு நாழிகைஆகுமென அவர்க்குத் தோன்றியது. வித்வான் வந்து

விட்டால், ஒன்றுமில்லை யென்று சொல்லநேருமே. பிராணனை விரைவாய்ப் போக்கிக்கொள்ள வேறுவழி யொன்று மில்லையா, என்று சிறிது யோசனையில் மனத்தைப் போக்கினார். நேசராகிய வைத்தியர் முன்கொடுத்த குளிகை ஞாபகத்தில் வந்தது. உடனே அவர் அதை எடுத்துச் சாப்பிட்டனர். அம்மருந்து எப்படிப்பட்ட விஷநோய்களையும் அதி சீக்கிரத்திற் சாந்தப்படுத்தி உடலுக்குத் தைரியத்தைக் கொடுக்கவல்லதான அமிர்தசஞ்சீவி ஆதலால் பிரபுவுக்குண்டான விஷநோயை அப்பொழுதே அது போக்கிவிட்டது மல்லாமல் அவரடைந்திருந்த களைப்பையும் ஆற்றியது. பார்த்தார் காளத்தியார் "இது என்ன அநியாயம் பாம்புதான் முன்பு என்னைக்கடிக்காமல் விட்டது இப்பொழுது படு விஷமுங்கூட என்னைக் கொல்லவில்லையே, நான் என்ன அவ்வளவுபாவியா? இப்படிப் பாம்புக்கும் பாம்பாய், படு விஷத்துக்கும் படுவிஷமாய் உலகத்தில் உதித்தவர் என்னையன்றி வேறெவரிருக்கிறார்" என எண்ணமிட்டுக் கொண்டிருக்கும் பொழுது, அரசனால் அனுப்பப்பட்டவர்கள் அங்கு வந்து கூடினர். அமைச்சர், காளத்திப்பிரபுவை வணங்கி, வேந்தனுடைய கட்டளையை விண்ணப்பஞ் செய்து பல்லக்கிலேறும்படி கேட்டுக்கொண்டனர். பிரபுவும் மகாலோபி முகத்தில் விழிக்க வேண்டிவிருக்கிறதே, என்று யோசித்துக் கொண்டிருக்கையில் வழியிற்கண்ட கவிவாணரும் அங்கு வந்து சேர்ந்து அவரைப்புகழ்ந்து பாடினர்.

அப்பால் காளத்தியார் அந்த உலோபவேந்தனைத்தியாக சக்ரவர்த்தியாக்கத்தருணம் இதுவே எனத்திருவுளங் கொண்டவராய்த் தனக்கு வந்த கனகதண்டிகையில் அப்பொழுதுவந்த தமிழ் வித்வானை ஏற்றி, போகிகளோடு தாமும் முற்கொம்பில் முதல்வனாகத் தாங்கிச் செல்லலானார். மந்திரிகள் அவரை அவ்வாறுசெய்வது தக்கதன்றென எவ்வளவோ வேண்டிக்கொண்டார்கள். பிரபு

இப்படிச் செய்வதுதான் எனக்குப் புகழும்புண்ணியமும் புருஷார்த்தமும்என்று அவரைச்சமாதானப்படுத்தினர். கடல்போல்வாத்தியங்கள்முழங்கின. கட்டிய மிசைத்தனர். இவ்வாறு கோலாகலமாக அவர்கள் அரசனகரை அடுத்தனர். அரசனும் எதிர் வந்து காளத்தியார் பல்லக்குத்தாங்கிவருதலைக்கண்டு "தேவரீர் இவ்வாறு செய்வது அடியேனுக்கு இழிவல்லவா? முன் நான் தங்களுக்குச் செய்த அபராதங்கள் அடியேனது நெஞ்சததைப் பிளக்கின்றன. அவைகளைப் பொறுத்தருளி, என்னைநல்வழிப்படுத்திக்காத்தருளவேண்டு" மென்று அவர்காலில் விழுந்து வணங்கினான். உடனே அவரும் அவனை வணங்கி, "அரசே! தாங்கள் என்னை இப்படிப் பரீக்ஷிக்காவிடில் எனது புகழ் உலகத்தில்எப்படிப்பரவும்?" என்று பல உபசாரவார்த்தைகள் சொன்னார். அப்பால் அவ்வேந்தன் அவரையும் அந்தவித்துவானுடன் அந்தப் பல்லக்கிலேற்றுவித்துக் கொம்பு பிடித்துத் தாங்கிக்கொண்டே அரண்மனைசார்ந்தான். புலவரோடு பிரபுவையும் ஆசனத்திலிருத்தி உபசரித்தான். காளத்தியார் அந்த நாவலர்க்கு அரசனைக்கொண்டே கனகாபிஷேகஞ் செய்வித்து அவரை அனுப்பினர்.

அப்பால் அவர் அக்காவலனது, வேண்டுகோளால் அவனுக்கு மந்திரித்தலைமை வகித்து, அவனது செல்வத்தை நல்வழியில் உபயோகப் படுத்தலாயினர். பறிமுதல் செய்யப்பட்ட பொருளின் இரட்டிப்புச் செல்வங்களை அந்த மன்னவன் வணக்கத்துடன் கொடுக்கக் காளத்தியார் பெற்று, அவைகளை யெல்லாம் செந்தமிழ்த் தெய்வத்தின் திருவடிமலருக்கே காணிக்கையாக்கிச் சிறந்து விளங்கினர்.

முற்றிற்று.

நின்றைக்காளத்தி வள்ளல் சரித்திரத்திலுள்ள பாட்டுக்களுக்குப் பொழிப்புரை.

"ஈகை"—என்ற பாட்டு.

(இரப்பார்க்குக்) கொடுப்பது இல்லை யென்றாலும் (அவரிடத்து) இனிமையான சொற்களைச் சொல்லுவதிலுங்கூட, தரித்திரப்படுதல் அம்மம்ம! மிகவுங் கொடியதேயாகும். நாக்கினுடைய பலத்தை அடக்கி, கொடிய தீவினை யென்னுங்கொல்லனால் வாய் பூட்டு இடப்பட்டால் ஆ! ஆ! அவர் என்னசெய்வார்!

"நின்றை நின்ற"—என்ற பாட்டு.

திருநின்றவூரில் வசிக்கின்ற மஹத்தான கீர்த்தியையுடைய வரையாது கொடுக்கும் (காளத்திப்) பிரபுவே! (உபயோகமற்ற) கடல் நீரை ஒத்த செல்வப் பெருக்குடைய (உலோப) வேந்தனுக்குட்பட்டிருக்கும் இந்த நாட்டில் (அக்கடலை அடுத்து உபகாரப்படுகின்ற) ஊற்று நீர் போல் நீ விளங்குகின்றனை. இது ஆச்சரியமேயாகும். கரியநிறத்தையுடைய கடலை அடுத்த கழிகளிலுண்டாகும் புலால் நாற்றத்தின் மத்தியில் ஓர்க் கோலை யென்னும் ஓர் வாசனைப் பொருளும் நறுமணம் வீசுதல் உண்மையே ஆகுமல்லவா?

"மன்னராண்ட"—என்ற பாட்டு.

(முன் உலகத்தை) அரசாட்சி செய்த அரசர்களின் தொகை, மாநிலத்து மண்ணணுவைக் காட்டிலும், கோடிப்பங்கு அதிகமாகும். இனிமேலும் ஆளப்பட்ட வேந்தர்கள் எத்தனை கோடிப் பேர்களோ?.

"ஆலை"—என்றபாட்டு.

ஆலமரத்தைப் பாலாமரமாக்க முடியுமா?. அரிய நாயின் வாலைக் குணக்கெடுக்கக் கூடுமா? கருப்பு நிறத்தையுடையகாக்கையைப் பேசும்படிசெய்யமுடியுமா? முடியாதல்லவா? (அது போல்) இரக்கமற்ற கீழ்மக்களை மேன்மக்களாக்க எவராலுமாவதில்லை.

"பாடு பட்டு"—என்ற பாட்டு.

பணத்தை வருந்திச் சம்பாதித்து, (அனுபவியாமல்) புதைத்து வைத்து, அச்செல்வங் கொடுதலினால் இம்மைமறுமைக்குரிய சுகங்களை) இழந்துவிட்டமனிதர்களே! (நான் சொல்வதைக்) கேளுங்கள், உயிர்உடலை விட்டு நீங்கினபின்பு பாவிகளே! அந்தப் பணத்தை இவ்விடத்தில் யாவர் அனுபவிப்பவர்?

"கரமிருந்தும்"—என்ற பாட்டு.

கையேந்தி யாசிக்கப்பட்டவர்க்குக் கொடுக்கக் கையிருந்தும் இல்லாதவனானன். ஏழைகளை இரக்கத்துடன் நோக்கக் கண்ணிருந்தும் இல்லாதவனானன். எழுந்து சென்று வணங்குதற்குக் காலிருந்தும் நொண்டியானன். (எளியோர்கூறும்) இரக்கமன சொற்களைச் சிறிது கேட்கக் காதுள்ளவனுயிருந்தும் செவிடனாகி விட்டான்.

"எல்லார்க்கும்"—என்ற பாட்டு.

செருக்குக் கொள்ளாமல் அடக்கமாயிருத்தல் யாவர்க்கும். நன்றாகும்; ஆயினும், அவருள்ளும் செல்வவான்களுக்கு (அது) வேறொரு செல்வமாகத் தோன்றுஞ் சிறப்பினையுடையதாகும்.

"நிலையான"—என்ற பாட்டு

உறுதியான பந்துக்களும், கூட்டமான சிநேகிதர்களும், நன்னெறி நடக்கும் பெரியோரும், அழியாத கீர்த்தியும, ஆகம புராணாதிகளாலுண்டாகும் ஞானமும், உண்மை நிலைகெடாத மேன்மையான தவசும், மெய்ஞ்ஞானமுதிர்ந்த ஆசிரியனும், பதியாகிய பரமசிவமும், அடைந்துகொள்ளத்தக்க மோக்ஷமும் ஆகிய எல்லாம் பொருட் செல்வந்தான் என்று துணிந்து செருக்கடைவதானன்.

"ஆகாதேனி"—என்ற பாட்டு.

தனக்குக் கிடைப்பதில்லை என்றாலும், உள்ளிடத்தில் நெய்யிருப்பதினால் எறும்புகள் விட்டுப் பிரியாமல், அப்பாத்திரத்தின் புறத்திலேயே சுற்றித் திரிந்து கொண்டிருக்கும். (அதுபோல) ஒரு சிறிதுங் கொடாதவரா யிருந்தாலும் செல்வ முள்ளவரை இல்லாதவர் விட்டுப் பிரியமாட்டார்கள்.

இனிவரும் பாடல்கள் மூன்றும் வினவும் விடையுங் கலந்துள்ளன. பொருளும் வெளிப்படை, ஆனதால் சில குறிப்புகள் மாத்திரம் இங்குவரையப் படுகின்றன.

"சிற்றெறும்பு"—என்றபாடல்.

கவி—வித்துவான், குரங்கு.
நாவலன்—புலவன், நாக்கில்லாதவன்—ஊமை
புதன்—வித்துவான், ஓர் கிரகம்.
பண்டிதன்—படித்தவன், முன்பு இதஞ் செய்தவன்
ஆகவே இப்பொழுது விரோதி.

"உயர்வான"—என்ற பாட்டு.

சுரபி—காமதேநு (மாடு). கற்பகம்—தேவதரு (மரம்) சிந்தாமணி (நினைத்ததைக் கொடுக்கும் இரத்தினம்) (சிலை—கல்) கர்ணன்—சூரியனால் குந்திக்குப் பிறந்தவன்— அரிச்சந்திர ராஜன் சந்திரமதியை விலை செய்தான்.

"விள்ளுமோரு"—என்ற பாட்டு.

ஈகையுளன்—கொடையாளி, ஈமொய்க்கின்றகையுடையவன்.

சிவறி.—விசிறி.

கொள்ளுமோ ஈகை—என் கை கொடுக்குந் தன்மையை பொருந்தியிருக்குமா? என் கையில் எப்படி ஈ மொய்க்கும்?

"கட்டியடி"—என்ற பாட்டு.

கட்டிவைத்து அடிக்கப்பட்டவர்க்கும், கண்ணிலே (ஊசி கொண்டு) குத்தப்பட்டவர்க்கும், எட்டி அடிக்கப்பட்டவர்க்கும் அலகிலடித்துப்பல்லை உதிர்க்கப்பட்டவர்க்கும், பொருளைக்கொடுப்பரே அல்லாமல் முறைப்படி பாடப்பட்ட வித்வான்களுக்குக் கொடுக்க மாட்டார்கள்.

"பருத்தி"—என்ற பாட்டு.

எவர்க்குந்தலைவனே! காஞ்சிபுரத்தி லெழுந்தருளிவிளங்கும் ஏகாம்பரநாதக்கடவுளே! பருத்திப் பொதியைப்போல வயிறு பருத்து வீங்கும்படி தங்களுடைய (மூச்சு விட்டுக்கொண்டிருக்கும்) துருத்தியாகிய உடலுக்கு ஆறுவகையான ருசி போஜனத்தைப் போடுகின்றவரும், அதிதியானவரை அழைத்து வந்து (ஒருகாலத்திலேனும்) அன்னங்கொடுக்காத வருமான உலோபிகளை ஏன் இந்த உலகத்தில் உயிர்வாழ வைத்திருக்கின்றீர்?

"எனதேன"—என்றபாட்டு.

என்னுடைய பொருளேதானென்று துணிந்திருக்கின்ற அறிவு கெட்டவனது செல்வப்பொருளை (வருந்தித்தேடாத நானும்) என்னுடைய செல்வமென்று தான் துணிந்திருப்பேன். தன்னுடைய பொருளாயிருந்தால், வருத்தப்பட்டுத்தேடிய தானும், அவ்வாறு துணிந்திருக்கும் தருமத்தினிமித்தம் கொடுக்க மாட்டான். அதனாலாம் பயனாகிய இன்பங்களை அனுபவியான். என தேளென்றுதுணிந்த நானும்அப் பொருளை (ஒருவர்க்கும்)கொடேன் மேற்படி—பயனாகிய இன்பங்களையும் அனுபவிக்க மாட்டேன்.

"நீள"—என்ற பாட்டு.

விட்டுப் பிரியாத நிழலைப் போல் நான் சென்றவிடமெல்லாம், உடன் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்ற தரித்திரமே! (இப்படி) நாளைத்தினமும் என்னைத்தொடர்ந்து வருவாயோ? நின்றைக்காளத்தி வள்ளலின் பக்கலில் (நாளைத்தினம்) சென்று விடுவேனே யானால் உனக்கும் எனக்கும் யாதொரு சம்பந்தமுமில்லாமற்போய்விடும். இன்றைக்குச் (சிறிது பொறுத்து) இருப்பாயாக.

"என்கூட"—என்ற பாட்டு.

நெடுநாளாய் என்னைப்பற்றி விடாத தரித்திரமே! (நீ)என்னுடனேஜெனித்தாய்; என்கூடவே வளர்ந்தாய் என்னைவிடாதுபற்றியே இவ்விடத்துக்கும் வந்துவிட்டாய். (யானிப்பொழுது) அரசர்கள் வந்து கூடுகின்ற நின்றைநகரத்தின் (பிரபுவின்முன்) வந்துவிட்டேன். இனிமேல் நீ என்முகத்தை ஒருநாளும் காணவேமாட்டாய்.

அறிவிப்பு.

செய்யுள் நூல்கள்.

1.	அம்பைத் (அம்பாசமுத்திரம்) தலபுராணம்	1—8—0
2	அரிகேசநல்லூர் பஜனமடாலய குமாரக் கடவுள் பிள்ளைத்தமிழ்.	0—2—0

வசன நூல்கள்.

		ரூ அணை
1.	ஆத்திசூடி நீதிகதைகள்.	0—8—0
2.	ரெக்ஷகர் (கிறிஸ்து) சரித்திரம்.	0—8—0
3.	பொய்யாமொழிப்புலவர் சரித்திரம்.	0—4—0
4	திண்ணைக்காளத்தி வள்ளல் சரித்திரம்.	0—4—0
5.	தெய்வமிகமேல்.	0—2—0
6	அடைக்கலங் காத்தல்.	0—2—0

வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்துக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆர். அரிகரமையர்,
(தமிழ்ப்பண்டிதர்,
ஹைஸ்கூல்,
அம்பாசமுத்திரம்.